மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்

(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)

முன்னிலை - **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**

தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி) கும்பகோணம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி திங்கட்கிழமை

**I. A. No. 430/2025 in MCOP 229/2021**

1. கலியமூர்த்தி
(மனு நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்டார்)
2. மல்லிகா
3. கார்த்திகேயன்
4. சுரேஷ்
5. மதிவாணன் .... மனுதாரர்கள் / மனுதாரர்கள்

-எதிர்-

1) சீனிவாசன்
2) கிளைமேலாளர்,
டாடா ஏஜஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. லோகநாதன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அசோகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

மனுதாரர் உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 22 உட்பிரிவு 9 மற்றும் பிரிவு 151 சிபிசி-ன் கீழ் 1ம் மனுதாரர் கலியமூர்த்தியின் வாரிசுகளான 2 முதல் 5 வரையிலான மனுதாரர்களை அசல் மனுவில் மனுதாரர்களாக சேர்க்க வேண்டிய 90 நாட்களிலிருந்து 120 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்வதில் இருந்து ஏற்பட்ட அபேட்மெண்ட் மனுவை ரத்து செய்து இந்த மனுவை அனுமதித்து அசல் மனுவை மேல்நடத்த வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

2) **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

கடந்த 23.11.2020 அன்று நடந்த விபத்தில் 2ம் மனுதாரரின் கணவர் கலியமூர்த்தி

காயமுற்றதற்காக இழப்பீடு கோரி தாக்கல் செய்திருந்த அசல் மனு நிலுவையில் இருக்கும் போதே 1ம் மனுதாரர் கலியமூர்த்தி கடந்த 28.11.2021 அன்று இறந்து விட்டார். மனுதாரர் கலியமூர்த்தியின் வாரிசுகளான 1. மல்லிகா, 2. கார்த்திகேயன், 3. சுரேஷ், 4. மதிவாணன் ஆகியோரை அசல் மனுவில் மனுதாரர்களாக ஏற்று வழக்கினை மேற்கொண்டு தொடர்ந்து நடத்திட மனு தாக்கல் செய்துள்ளார்கள். 2ம் மனுதாரரின் கணவர் காலமானதை வழக்கறிஞரிடம் உடனடியாக தெரிவிப்பதற்கு இயலவில்லை என்றும், அதனால் உரிய காலத்தில் வாரிசு சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்வதில் 1374 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி காலதாமதத்தை மன்னிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப் படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் கலியமூர்த்தி 28.11.2021 அன்று இறந்துவிட்டார். ஆனால் மனுதாரர்கள் தரப்பில் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இம்மனுவானது காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் இறந்து போன நபரை சார்ந்து வாழவில்லை. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பது தான்?

5) **<u>தீர்வு</u>**:

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு எதிருரை மற்றும் கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டது. பிரதான கோருரிமை மனுவின் மனுதாரர் கலியமூர்த்தி என்பவர் தனக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக இழப்பீடு கோரி பிரதான மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட மனுவானது 2021ல் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்தபோது 28.11.2021 ல் கலியமூர்த்தி இறந்துவிட்டார். கலியமூர்த்தியின் மனைவி, மகன்கள் இறந்தவரின் வாரிசுகளாக தங்களை சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி இம்மனுவை தாக்கல்

செய்துள்ளார்கள். இறந்தவரின் வருமானத்தை மனுதாரர்கள் சார்ந்து இருந்தார்களா அல்லது இல்லையா என்பதை வழக்கின் இறுதி விசாரணையில் மட்டுமே தீர்மானிக்க முடியும். காலம் தாழ்த்தி 90 நாட்கள் முடிவடைந்து இறந்தவரின் வாரிசுகளை சேர்க்கும் மனு தாக்கல் செய்துள்ளதாக எதிருரையில் உள்ள சங்கதிகளின் மூலமாக தெரியவருகிறது.

வாரிசுதாரர்களை சேர்ப்பதில் வழக்கற்று போய்விட்டது என்றாலும், சார்ந்திருப்பவர்களை சேர்ப்பதில் கடுமையான நெறிமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. மனுதாரர்கள் இறந்தவரின் வருமானத்தை சார்ந்து இருந்தார்களா இல்லையா என்பது வழக்கு இறுதி விசாரணையில் மட்டுமே தீர்மானிக்க இயலும் என்பதால் மனுதாரர்களை மனுவில் இறந்தவரின் தரப்பினர்களாக சேர்ப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை நீதியின் நலன்கருதி மன்னிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G. MANIKANDARAJA
Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.23 17:10:08 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.